பத்தாம் வகுப்பு காலாண்டு தேர்வு -2024 சமூக அறிவியல் answer key

1) ஜப்பான்
2) ஹிரோஷிமா
3) 1991
4) ரூஸ்வெல்ட்
5) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கு பொருத்தமானதாக உள்ளது
6) இலங்கை
7) மாஞ்சாரல்
8) வண்டல் மண்
9) சூரியன்
10) மேகாலயா
11) சட்ட பிரிவு 360
12) மதிப்பு கூட்டு முறை
13) மேற்கூறிய அனைத்தும் சரி
14) மெட்ராஸ் உயர்நீதிமன்றம்

குறுகிய விடையளி

15) பன்னாட்டு சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களை பட்டியலிடுக பன்னாட்டு சங்கம் முதல் உலகப் போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாகவே காணப்பட்டது. சங்கத்திற்கென்று ராணுவம் இல்லை என்பதால் சங்கத்தால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த இயலவில்லை.
16) டாலர் ஏகாதிபத்தியம் தெளிவுபட விளக்குக
டாலர் ஏகாதிபத்தியம் என்னும் சொல் தொலைதூர நாடுகளுக்கு பொருளாதர உதவி செய்வதன் மூலம் அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தவும் தக்க வைத்துக் கொள்ளவும் அமெரிக்கா பின்பற்றிய கொள்கையில் விளக்க பயன்படுத்தப்படுவதாகும்.
17) பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களை குறிப்பிடுக 1944 இல் நடைபெற்ற பிரெட்டன் உட்ஸ் மாநாட்டிற்கு பின் 1945 இல் பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்கள் நிறுவப்பட்டன உலக வங்கி பன்னாட்டு நிதி அமைப்பு
18) சீனாவில் 1911 ஆம் ஆண்டு நடந்த புரட்சிக்கான ஏதேனும் மூன்று காரணிகளை குறிப்பிடுக மஞ்சு வம்சத்தின் புதிய பேரரசர் இரண்டு வயது நிரம்பியவர் எனவே மாகாண ஆளுநர்கள் சுதந்திரமாக செயல்பட்டனர். உள்ளூர் ராணுவ கிளர்ச்சி 1911-ல் ஏற்பட்டு அதன் பாதிப்பு பல மட்டங்களில் பரவியது மாகாண ஆளுநர்கள் பிரதி நிதித்துவங்களை உதறி தங்கள் சுதந்திரத்தை பிரகடனப்படுத்தினார். நடுத்தர வர்க்கத்திலிருந்து தலைவர்கள் உருவாயினர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

19) இலட்சத்தீவுக் கூட்டங்களை பற்றி விவரி . இலட்சத்தீவு மினிக்காய் மற்றும் அமின்திவித் தீவு கூட்டங்களை இணைந்து 1973 முதல் இலட்சத்தீவுகள் என்று அழைக்கப்படுகின்றன இந்தியாவில் மேற்கு பகுதியில் அரபிக் கடலில் அமைந்துள்ள இவை முருகைப்பாறைகளால் ஆனவை. இத்தீவுகள் சுமார் 32 ச.கி. மீ பரப்பளவு கொண்டது இதன் தலைநகர் கவரட்டி ஆகும் இங்கு பிட்தீவில் பறவைகள் சரணாலயம் ஒன்று உள்ளது

20) வெப்ப குறைவு விகிதம் என்றால் என்ன புவிப் பரப்பிலிருந்து உயரே செல்ல செல்ல வளி மண்டலத்தில் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் 6.5*C என்ற அளவில் வெப்பநிலை குறைகிறது இதற்கு வெப்ப குறை விகிதம் என்று பெயர்

21) இந்தியாவில் காணப்படும் மண் வகைகளின் பெயர்களை பட்டியலிடுக வண்டல் மண் ,கரிசல் மண் , செம்மண் சரளை மண் காபிமற்றும் மலை மண் வறண்ட பாலைமண் உப்பு மற்றும் காரமண் களிமண் மற்றும் சதுப்பு நில மண்

22) இயற்கை எரிவாயு என்றால் என்ன இயற்கை எரிவாயு பொதுவாக பெட்ரோலிய பகுதிகளுடன் இணைந்து காணப்படுகிறது இது இயற்கையாக உருவாகும் ஒரு நீர்ம கரிம வாயுவாகும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் அழிந்து புதையுண்ட தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் அதிக வெப்பம் மற்றும் அழுத்தம் காரணமாக மக்குவதன் மூலம் உண்டாக கூடிய ஒரு நீர்ம கரிம வாய்வாகும்

23) இரயில் போக்குவரத்தின் நன்மைகள் ஏதேனும் நான்கினை எழுதுக இரயில் போக்குவரத்து மிக அதிகமான பயணிகளையும் சரக்குகளையும் ஏற்றி செல்கிறது அது மக்களை ஒன்றிணைப்பதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கிறது வணிகம் சுற்றுலா கல்வி போன்றவற்றை ஊக்குவிக்கிறது வேளாண் துறையில் எழுதில் அழுகக்கூடிய பொருட்களை வர்த்தகம் செய்ய விரைவான போக்குவரத்து அளித்து உதவி புரிகிறது மூலப் பொருட்களை தொழிற்சாலைகளுக்கும் தயாரிக்கப்பட்ட தொழிலக பொருட்களை சந்தைகளுக்கும் கொண்டு செல்ல பயன்படுகிறது

24) இந்தியாவின் செம்மொழிகள் எவை தமிழ் சமஸ்கிருதம் தெலுங்கு கன்னடம் மலையாளம் ஒடியா

25) ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் யாவை அவர் இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும் 35 வயது நிரம்பியராக இருத்தல் வேண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினராகவோ இருத்தல் கூடாது அவ்வாறு இருப்பின் அவர் ஆளுநராக பதவி ஏற்கும் பொழுது தாமாகவே பதிவு

காலியாகிவிடும் அவர் லாபம் தரும் எந்த தொழிலிலும் ஈடுபடக்கூடாது

26) மதிப்பு கூட்டு முறையை எடுத்துக்காட்டுடன் வரையறு
மதிப்பு கூட்டு முறையில் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலை பண்டங்களின் மதிப்பை சேர்க்கும் பொழுது உற்பத்தி செய்யப்பட்ட இறுதிநிலை பண்டங்களின் மொத்த மதிப்பு கிடைக்கிறது உதாரணமாக ஒரு கோப்பை தேநீரின் சந்தை மதிப்பை கணக்கிட இடைநிலை பண்டங்களான டீத்தூள் , பால் மற்றும் சக்கரை ஆகியவற்றின் மதிப்பு கூட்டினால் தேநீரின் மதிப்பு கிடைக்கிறது இடைநிலை பண்டங்களின் மொத்த மதிப்பு = இறுதி பண்டத்தின் மொத்த மதிப்பு

27) தமிழ்நாட்டில் உள்ள சில ஊட்டச்சத்து திட்டங்கள் பெயர்கள் எழுதுக
புரட்சித்தலைவர் எம்ஜிஆர் ஊட்டச்சத்து உணவு திட்டம் , ஆரம்ப கல்விக்கு தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம், பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம், மதிய உணவு திட்டம்.

28) இந்திய குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்
குடியரசு தலைவர் மாநிலங்களவை மற்றும் மக்களவைத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைத்து மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் டெல்லி மற்றும் புதுச்சேரியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளடக்கிய வாக்காளர் குழுமத்தால் ஒற்றை மாற்று வாக்குமூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்

விரிவான விடையளி

29) கோடிட்ட இடத்தை நிரப்புக

1) டாக்டர் சன் யாட் சென்
2) ஜோதி பா பூலே
3) வான்வழிப் போக்குவரத்து
4) மக்களால்
5) 2013

30)உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் 1919- 39 இந்தியாவின் காலநிலை நீக்க செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பது குறித்து வரிசையாக விவரிக்க

மாகணங்களில் இரட்டை ஆட்சி
இந்தியாவை தொழில் மயமாக்குவதில் நடவடிக்கை குறைபாடுகள்
இந்திய வேளாண்மையின் மீது பெருமந்தம் ஏற்படுத்திய தாக்கம்
1935 இந்திய அரசு சட்டம்

www.Padasalai.Net

31)இரண்டாம் உலகப் போரின் விளைவுகளை ஆய்வு செய்க

உலகம் இரு அணிகளாக பிரிதல்

அணு ஆயுதப் பரவல்

காலனியாதிக்க நீக்கம்

32) இந்திய சமூகத்தின் புத்தெழுச்சிக்கு இராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் ஆற்றிய தொண்டினை திறனாய்வு செய்க

இராமகிருஷ்ண பரமஹம்சர்.

சுவாமி விவேகானந்தரின் தொண்டு

33) காரணம் கூறுக மழைநீர் சேமிப்பு அவசியம் இந்தியா மழைக்கு பருவ காற்றின் நம்பி உள்ளது இம்மலை சீரற்ற நிலையற்ற முறையில் பொழிகிறது பல சமயங்களில் மழை குறைவாகவே பெய்கிறது இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கொண்டே செல்கிறது கிடைக்கும் மழை நீரை சேமிப்பது மிக அவசியம்

வேறுபடுத்துக

1) புதுப்பிக்க இயலும் வளம் புதுப்பிக்க இயலாத வளங்கள்

புதுப்பிக்க இயலும் வளங்கள்

பயன்பாட்டிற்கு பிறகு இயற்கை முறையில் மீட்டுருவாக்கம் செய்து கொள்ள இயலும் வளங்கள் புதுப்பிக்க இயலும் வளங்களாகும் சூரிய ஆற்றல் காற்று சக்தி உயிர் சக்தி ஓத சக்தி அலை சக்தி போன்றவை புதுப்பிக்கக் கூடியவை

புதுப்பிக்க இயலா வளங்கள்

பயன்பாட்டிற்கு பிறகு மீண்டும் மீட்டுருவாக்கம் செய்ய இயலாத வளங்கள் புதுப்பிக்க இயலா வளங்களாகும் நிலக்கரி பெட்ரோலியம் இயற்கை வாயு போன்றவை புதுப்பிக்க இயலாதவை

2) உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்

உள்நாட்டு வணிகம்

ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வணிகம் உள்நாட்டு வணிகம் எனப்படுகிறது உள்ளூர் வணிகம் என அழைக்கப்படுகிறது இதில் நில வழி போக்குவரத்து முக்கிய பங்கு வைக்கிறது உள்நாட்டு நாணயம் பயன்படுத்தப்படுகிறது

பன்னாட்டு வணிகம்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கு இடையே நடைபெறும் வணிகம் அயல்நாட்டு வணிகம் எனும் அழைக்கப்படுகிறது இதில் நீர்வழி மற்றும் வான்வழி போக்குவரத்து முக்கிய பங்கு வைக்கிறது அந்நிய நாட்டு பணம் பயன்படுத்தப்படுகிறது

34) கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக

கங்கை ஆறு உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள உத்தரகாசி என்னும் மாவட்டத்தில் கங்கோத்திரியில் என்னும் இடத்தில் உற்பத்தி ஆகிறது நீளம் 2525 கிலோமீட்டர் கோமதி காக்கரா கண்டாக் கோசி யமுனை சோன் சாம்பல் துணை ஆறுகள் வங்கதேசத்தில் கங்கை நதி பத்மா என்ற பெயரில் அழைக்கப்படுகிறது கங்கை பிரம்மபுத்திரா ஆறுகள் சேர்ந்து உலகிலேயே மிகப்பெரிய டெல்டாவை உருவாக்கி பின் வங்காள விரிவுடாவில் கலக்கிறது கங்கை ஆற்றின் தொகுப்பு இந்தியாவின் மிகப்பெரிய வடிகால் அமைப்பைக் கொண்டது கங்கை ஆற்றங்கரையில் பல நகரங்கள் உள்ளன கங்கை சமவெளி அதிக மக்கள் அடர்த்தி கொண்டது

35) நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் பற்றி விவரி

நெல் நெல் இந்தியாவின் பூர்வீக பெயராகும் சீனாவிற்கு அடுத்தபடியாக உலக அளவில் நெல் உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடம் வகிக்கிறது நெல் அயன் மண்டல பயிராகும் 24*C சராசரி வெப்பநிலையும் 150 செ மீ மழை அளவும் நெல் பயிரிட தேவையான சூழலாகும் வளமான களிமண் அல்லது வண்டல் மண் நெல் சாகுபடிக்கு ஏற்றது பயிரிட அதிகமான தொழிலாளர்கள் தேவை விதைத்தூவல் முறை ஏர் உழுதல் துளையிடுதல் முறை நாற்று நடுதல் முறை ஆகிய மூன்று முறைகளில் இந்தியாவில் பயிரிடப்படுகிறது மேற்கு வங்காளம் உத்தரபிரதேசம் பஞ்சாப் தமிழ்நாடு ஆந்திர பிரதேசம் அசாம் ஒடிசா ஆகியவை நெல் அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலங்கள் ஆகும்

கோதுமை நெற்பயிருக்கு அடுத்தபடியாக இரண்டாவது முக்கிய உணவு பயிர் கோதுமை ஆகும் கோதுமை விதைக்கும் பருவத்தில் 10-15*C வெப்பமும் முதிரும் பருவத்தில் 20- 25 *C வெப்பமும் தேவைப்படுகிறது 85 சதவீதத்திற்கு அதிகமான கோதுமை உற்பத்தி உத்திரபிரதேசம் பஞ்சாப் அரியானா ராஜஸ்தான் மத்திய பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்களில் இருந்து கிடைக்கிறது கரிசல் மண்ணுக்கு காணப்படும் மகாராஷ்டிரா குஜராத் மாநிலங்களிலும் கோதுமை பயிரிடப்படுகிறது

36) இந்தியாவில் பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக

இந்தியாவின் மான்செஸ்டர்

மும்பை பகுதியில் பருத்தி நெசவாலைகள் மிகுந்து காணப்பட காரணங்கள் பின்வருமாறு

தென்னிந்தியாவின் மான்செஸ்டர்

இந்தியாவின் பருத்தி நெசவாலைகளின் பரவல்

தமிழ்நாட்டில் பருத்தி நெசவாலைகளின் பரவல்

37) இந்திய அரசியலமைப்பின் சிறப்பு கூறுகளை விளக்குக

உலகில் உள்ள எழுதப்பட்ட அனைத்து அரசியல் அமைப்புகளிலும் மிகவும் நீளமானது

இதன் பெரும்பாலான கருத்துகள் நாடுகளின் அரசியலமைப்புகளில் இருந்து பெறப்பட்டது

இது நெகிழாத் தன்மை கொண்டதாகவும் நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது

இது கூட்டாட்சி முறை அரசாங்கத்தை ஏற்படுத்துகிறது

இந்தியாவில் சமய சார்பற்ற நாடக மாற்றுகிறது

சுதந்திரமான நீதித்துறை வழங்குகிறது

உலகளாவிய வயது வந்த வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்தவித பாகுபாடு இன்றி வாக்குரிமை வழங்குகிறது

38) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி

அமைச்சரவை தொடர்பானவை

ஆளுநர் தொடர்பானவை

சட்டமன்றம் தொடர்பானவை

39) இந்தியாவின்GDP யின் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி

முதன்மை துறை வேளாண் துறை

இரண்டாம் துறை தொழில் துறை

மூன்றாம் துறை பணிகள் துறை

40) பசுமைப் புரட்சி ஏன் தோன்றியது என்பதை பற்றி விவரி

www.Padasalai.Net

இந்தியாவில் ஏற்பட்ட வறட்சியின் விளைவாக உணவு தானியங்களின் இறக்குமதியை சார்ந்து இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது

போதிய அந்நிய செலாவணி இருப்பு இல்லாததால் இந்தியா பணக்கார நாடுகளிடம் இருந்து சலுகை விலையில் உணவு தானியங்களை கோர வேண்டியிருந்தது

அமெரிக்கா தனது பொதுச் சட்டம் 480 திட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு உதவி வழங்கியது

அதிக மக்கள் தொகை கொண்ட வளர்ந்து வரும் ஒரு நாடு புரட்சிக்கு சாத்தியமான தேர்வாளராக கருதப்பட்டது.

அமெரிக்க நிர்வாகம் மற்றும் போர்டு அறக்கட்டளை போன்ற மனிதநேய அமைப்புகள் உணவு உற்பத்தி அதிகரிக்க கோதுமை மற்றும் அரிசியின் உயர் ரக விளைச்சல் வகைகளுக்கான திட்டத்தை வகுத்து அறிமுகப்படுத்தியது..

திட்டம் நீர்ப்பாசனம் இருக்கும் இடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது .

திட்டங்களில் முடிவுகளை உறுதி செய்யப்பட்டதால்அதிக எண்ணிக்கையிலான மாவட்டங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

இவ்வாறு நம் நாட்டில் பசுமைப் புரட்சி தோன்றி உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.

41) காலக்கோடு 1920 1940 ஏதேனும் ஐந்து நிகழ்வுகள்

42) கீழ்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்

ஜப்பான், ஹவாய் தீவுகள், செங்கடல், பிரான்ஸ், ரஷ்யா

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி

43) அ) சீனாவை ஒரு பொதுவுடமை நாடாக்க மா சேதுங்கின் பங்களிப்பை அளவிடுக

விவசாயிகளை வழி நடத்திய மாவோ

நீண்ட பயணம்

மாவோவின் எழுச்சி.

தேசிய மக்கள் காங்கிரஸ்

www.Padasalai.Net

அல்லது

ஆ) இந்தியாவின் சாலைகளை வகைப்படுத்தி விளக்குக

தேசிய நெடுஞ்சாலைகள்

மாநில நெடுஞ்சாலைகள்

மாவட்ட சாலைகள்

கிராம சாலைகள்

எல்லைப்புற சாலைகள்

தங்க நாற்கரச் சாலைகள்

விரைவு சாலைகள்

பன்னாட்டு நெடுஞ்சாலைகள்

44) கீழ்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்

அ) K2 சிகரம்/ காட்வின் ஆஸ்டின், அதிக மழை பெறும் பகுதி, பாக் நீர்ச்சந்தி, நெல் விளையும் பகுதி, கரிசல் மண் பகுதி, மென்பொருள் தொழிலகம் , மர்ம கோவா துறைமுகம், இரும்பு மேற்கு வங்கம் அல்லது

ஆ) மேற்கு தொடர்ச்சி மலை, மாளவ பீடபூமி, வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை, பாலைவன தாவரங்கள் பகுதி, டெல்லி கன்னியாகுமரி சாலை வழி, திக்பாய் பெட்ரோலியம் பகுதி ,வண்டல் மண் பகுதி, வேம்பநாடு ஏரி.

Created by M. Nagoorgani BT assistant GHS T.punavasal Ramnad district

www.Padasalai.Net